**வறுமைசார் பொருளாதார மேம்பாட்டு மற்றும் சமூக முன்னேற்ற (பீஈஏசீஈ) செயற்திட்டத்தின் (கூறு ஏ) -2012**

---

## 01. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் செம்மையாக்கல்களின் தாக்கத்தைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்து பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 02. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான செயற்திட்டத்தின் செலவு ரூபா 584,292,445 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 6,292,407,976 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு** | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு** |
|---|---|---|---|
| | **2012** | **2011** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நிலையான சொத்துக்கள் | 18,800,000 | 11,711,893 | 304,560,053 |
| வாகனங்கள் | - | - | 209,637,939 |
| நடைபெறும் வேலை | 220,374,486 | 447,525,295 | 1,073,692,155 |
| பயிற்சியும் இயலுமையினைக் கட்டியெழுப்புதலும் | 18,295,560 | 55,030,916 | 430,466,566 |
| ஆலோசனை சேவைகள் | 10,605,290 | 246,561,048 | 980,833,544 |
| சிவில் வேலைகள், அளவீடுகள், நிர்மானங்கள் என்பன | 316,217,109 | 869,784,649 | 3,293,217,719 |
| மொத்தம் | 584,292,445 | 1,630,613,801 | 6,292,407,976 |

## 2.2 கட்டுநிதி நிதியக்கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | |
|---|---|---|
| | **ஜ.ஜென்** | **ரூபா** |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 34,531,015 | 50,653,546 |
| **கூட்டு** : | | |
| மீள் நிரப்பல்கள் | 216,148,328 | 334,329,769 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 7,108,634 |
| | 250,679,343 | 392,091,949 |
| **கழி** : | | |
| பற்றுதல்கள் | 235,519,897 | 369,657,485 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 15,159,446 | 22,434,464 |

## 03. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டு தொடர்பான ரூபா 17,578,441 தொகையான ஆலோசனைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அட்டுறு கொள்கைகளுக்கு முரணாக 2012 இன் நான்காம் காலாண்டின் செலவுகள் கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்ட அதே வேளை 2011 இன் நான்காம் காலாண்டின் ரூபா 131,091,608 தொகையான வட்டியும் சேவைக்கட்டணங்களும் நடைமுறை ஆண்டிற்கான செலவுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டு தொடர்பான வட்டி மற்றும் சேவைக்கட்டணங்களின் உண்மைத்தன்மையினை மெய்மையாய்வு செய்வதற்கு திறைசேரியிடமிருந்து போதிய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாணயமாற்று விகித வித்தியாசக் கணக்கின் ரூபா 28,727,037 தொகையான முன்னைய ஆண்டு இறுதி மீதியானது ரூபா 23,999,621 ஆக 2012 சனவரி 01 இல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. ரூபா 4,727,416 தொகையான வேறுபாட்டிற்காக விளக்கம் தரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் உப கட்டுநிதி கணக்கிலுள்ள ரூபா 19,304 தொகையான இனங்காணப்படாத வேறுபாடு மற்றும் முன்னைய ஆண்டு ஐந்தொகையில் காணப்பட்ட ரூபா 4,676 தொகையான இனங்காணப்படாத மீதி என்பன உரிய கணக்குகளுடன் கணக்கிணக்கம் செய்யப்படாது கட்டுநிதி - திரண்டநிதி கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) ஐந்தொகையின்படி மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் ரூபா 18,855,203 ஆக இருந்த போதிலும் இது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,855,203 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எனவே ரூபா 17,000,000 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூபா 234,650 பெறுமதியான இறப்பர் தள விரிப்பு, கதவுகள், யன்னல்கள், கூரைத்தகடுகள் போன்றவாறான நிலையான சொத்துக்கள் தவறுதலாக பயிற்சிச் செலவுகளாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) இறுதியான திறைசேரி அச்சுப்பிரதியின்படி, மீளாய்வாண்டிற்கான மொத்த செயற்திட்டச் செலவு ரூபா 631,084,310 ஆக இருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 584,292,445 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 46,791,865 வித்தியாசத்தைச் சுட்டிக்காட்டியது.

(ஊ) ஐந்தொகையிலும் முதலீட்டுக் கிரயக் கூற்றிலும் உள்ள நடைமுறையற்ற சொத்துக்களுக்கிடையே ரூபா 21,730,281 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

2012 நவம்பர் 20 ஆந் திகதிய 05/2012 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றுநிருபத்தின் 2.2.2 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் ரூபா 634,136 கூட்டு மொத்தமான காசு மீதிகள் செயற்திட்டத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களுக்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் இல்லாமையின் காரணமாக அவ்விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | பெற்றுக்கொள்ளப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நானாவிதக் கடன்பட்டோர் | 1,603,821 | விரிவான பட்டோலைகளும் காலப் பகுப்பாய்வும் |
| உபகட்டுநிதி | 276,060,000 | பற்றுச்சீட்டுக்கள் (பொது 172) |
| அமைய வேலையாட்கள் சம்பளம் | 589,444 | சம்பளத் திரட்டுக்கள் |
| | 278,253,265 | |

## 04. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் செயற்திட்டத்திற்காக ரூபா 696,577,719 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இறுதியான திறைசேரி அச்சுப்பிரதியின்படி, மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற மொத்தச் செலவு ரூபா 631,084,310 ஆக இருந்ததுடன் மொத்த சேமிப்புக்கள் ரூபா 65,493,409 ஆக இருந்தது. எனவே ரூபா 65,493,409 தொகையான நிதிகள் மீளாய்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளைப் பூர்த்தசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 நீர்ப்பாசன வேலைகளின் நிதிசார் செயலாற்றல்

நீர்ப்பாசனத் திணைக்களமானது செயற்திட்டத்தின் கீழ் 09 பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களையும் 09 நடுத்தர அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களையும் 80 சிறிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களையும் பூர்த்திசெய்வதற்குப் பொறுப்பேற்றிருந்தது. மீளாய்வாண்டிற்கான ஒரு வருடாந்த வேலைத்திட்டம் 2013 ஒக்டோபர் 03 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே சிவில் வேலைகள் மீதான உள்ளபடியான செலவுகளை மதிப்பிடப்பட்ட செலவுகளுடன் ஒப்பிட முடியாதிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது சிவில் வேலைகள் மீது ரூபா 316,217,109 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மதியுரையாளர் ஏற்கெனவே 2011 ஆம் ஆண்டில் நாட்டைவிட்டுச் சென்றிருந்ததனால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் வரையறுக்கப்பட்ட ஜப்பான் நிப்பொன் கொய் கம்பனிக்குமிடையே 2006 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஆலோசனைச் சேவை உடன்படிக்கையின் நியதிகளில் குறிப்பிடப்பட்ட மேற்பார்வையின்றி இச்சிவில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மதியுரைக் காலமானது செயற்திட்ட காலத்தின் இறுதி வரை நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 நீர்ப்பாசன வேலைகளின் பௌதீக செயலாற்றல்

பிரதான மற்றும் உப நீர்ப்பாசன முறைமைகளின் பௌதீக செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே செயற்திட்டத்தின் பௌதீகச் செயலாற்றலினை மதிப்பீடு செய்வது சாத்தியமற்றிருந்தது.

## 4.4 வருமானத் தோற்றுவிப்புக்கான கடன் நிகழ்ச்சித்திட்டம்

செயற்திட்ட பிரதேசத்திற்குள் கடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சானது சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி (ஜேபிஐசி), ரஜரட்ட அபிவிருத்தி வங்கி, வயம்ப அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் 2008 ஆகஸ்ட் 05 ஆந் திகதி ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. செயற்திட்ட பிரதேசத்திலுள்ள கிராமிய மற்றும் விவசாயிகள் அமைப்புக்களின் வருமானத்தை தோற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்கு உதவி அளிப்பதே பிரதான குறிக்கோளாக இருந்தது. கடன் நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், இந்நோக்கத்திற்காக ரூபா 82,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் அளிப்புக்கள் மற்றும் அறவீடுகளின் செயல்முன்னேற்றம் கீழே காட்டப்படுகின்றன.

| | வங்கி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நலன் பெறுனர்களின் திரண்ட எண்ணிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் அளிப்புக்கள் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் அறவீடுகள் | அறவீடுகளின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | |
| (அ) | ரஜரட அபிவிருத்தி வங்கி | 340 | 46,265,000 | 17,967,559 | 39 |
| (ஆ) | வயம்ப அபிவிருத்தி வங்கி | 599 | 73,004,500 | 43,508,943 | 60 |
| | மொத்தம் | 939 | 119,269,500 | 61,476,502 | 52 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரஜரட்ட அபிவிருத்தி வங்கியானது பிரதேசத்திலுள்ள அதனது 07 கிளைகளினூடாக ரூபா 46,265,000 பெறுமதியான கடன்களை வழங்கியிருந்ததுடன் மொத்த கடன் பெறுமதியில் ரூபா 17,967,560 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. அறவீடுகளின் செயல்முன்னேற்றம் 39 சதவீதமாக இருந்தது.

(ஆ) வயம்ப அபிவிருத்தி வங்கியானது பிரதேசத்திலுள்ள அதனது 06 கிளைகளினூடாக ரூபா 73,004,500 பெறுமதியான கடன்களை வழங்கியிருந்ததுடன் மொத்த கடன் பெறுமதியில் ரூபா 43,508,943 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. அறவீடுகளின் செயல்முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்தது.

## 4.5 ஆலோசனை சேவைகளின் நிதிசார் செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் இறுதி வரை ஆலோசனை சேவைகளுக்கான கொடுப்பனவுகளின் நிதிசார் செயலாற்றல் பின்வருமாறாகும்.

| ஆண்டு | வெளிநாட்டு உதவி | | மீளளிக்கக் கூடிய வெளிநாட்டு உதவி | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவு | மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2006 | 66,600,000 | 21,284,388 | 44,100,000 | 8,102,502 |
| 2007 | 84,400,000 | 85,168,691 | 54,600,000 | 63,034,184 |
| 2008 | 85,400,000 | 28,547,962 | 54,600,000 | 54,022,245 |
| 2009 | 86,600,000 | 90,330,254 | 54,600,000 | 63,146,948 |
| 2010 | 17,600,000 | 133,320,435 | 10,500,000 | 176,709,597 |
| 2011 | பெற்றுக்கொள்ள முடியவில்லை | 98,571,858 | பெற்றுக்கொள்ள முடியவில்லை | 147,989,190 |
| 2012 | பெற்றுக்கொள்ள முடியவில்லை | 6,403,788 | பெற்றுக்கொள்ள முடியவில்லை | 11,174,653 |
| மொத்தம் | 340,600,000 | 463,627,376 | 218,400,000 | 524,179,319 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ஆலோசனைக் கொடுப்பனவுகளாக ரூபா 17,578,441 தொகை இடம்பெற்றிருந்த போதிலும் ஆண்டிற்கான ஏற்பாடுகள் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2012 திசெம்பர் மாதத்தின் பண அளிப்பு பட்டோலையினைப் பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான ஆலோசனைக் கொடுப்பனவுகளைத் திருப்திகரமாகப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 4.6 அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள்

வாகனங்களைப் பயன்படுத்திய உத்தியோகத்தர்களின் கையொப்பங்களைப் பெற்றுக்கொள்ளாது ஆலோசனைக் கொடுப்பனவுகளின் கீழ் 17,735 கிலோ மீற்றர்களை ஓடுவதற்கான வாடகைக் கட்டணமாக ரூபா 520,379 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 புறநடையான கொடுக்கல்வாங்கல்கள்

**நிராவிய பண்ணைக்கு கோழிகள் முட்டையிடும் கொட்டில்களை நிர்மாணித்தல்**

அநுராதபுர மாவட்டத்திலுள்ள தம்புத்தேகம கிராமத்தில் ‘‘நிராவிய’’ என்று அழைக்கப்படும் பண்ணையில் கோழிகள் முட்டையிடும் பல கொட்டில்களை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 8,513,972 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இச்செலவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ‘‘நிராவிய’’ என்று அழைக்கப்படும் பண்ணையானது செயற்திட்டத்தின் கீழ் அல்லது நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் கீழ் சட்டரீதியாகத் தாபிக்கப்பட்ட ஒரு முயற்சியாக இருக்கவில்லை.

(ஆ) மொத்த செலவுகளில் ரூபா 3,128,013 தொகையான நிர்மாணக் கிரயமானது நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக பயிற்சி மற்றும் விழிப்புணர்வுச் செலவுகளாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நீர்ப்பாசனத் திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றத்தினை கண்காணித்தல்

(இ) கடன் நிகழ்ச்சித்திட்டம்

(ஈ) ஆலோசகர்களின் செயல்முன்னேற்ற அறிக்கையும் கொடுப்பனவுகளும்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்